# சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்!

இதழ் II






பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# சர்வார்ப்பணமும்! பிரம்மார்ப்பணமும்! என்ன செய்யும்?

இதழ் I



ஸத்திய வாக்கு (1)

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

ஸத்தியம் பேசுவோம், தர்மம் நிலை பெறும்!

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை!"

"நம்பினோர் கெடுவதில்லை!"

"தெய்வம் மனுஷ்யரூபம்!"

"யத் பாவம் தத் பவதி!"

"ஸ்ரீராம்; ஜெயராம்; ஜெயஜெயராம், ஓம்!"

"அகம்பிரம்மம், ஜெகம்பிரம்மம்!"

"அகமே எல்லாம்!"

"ஜெகம் பரமம் ஜீவாகாரம்!"

"சிறிதும் இல்லை!"

எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது யாமே! யாமே அது!
அதுவே நீ! நீயே அது! இது ஸத்தியம்!



உ

(உ)

சர்வார்ப்பணமும்!!! பிரம்மார்ப்பணமும்!!!

# என்ன செய்யும்???


(1) சர்வார்ப்பணம் :- இது நாமரூப முள்ள, ஸ்ரீபகவானிடம், சர்வசங்க பரித்தியாகம்! செய்வதாகும். **சர்வசங்கம்** என்றால்?

(A) நாமரூபம் அநித்தியம்! (B) நாமரூபங்களின் ஐக்கியம்! (C) நாமரூப ஐக்கியங்களின் பயன்! ஆகிய இம்மூன்றும், சர்வசங்கம் ஆகும். இம்மூன்றையும்! **நிர்மூலமாக** விடுவதே, சர்வசங்க பரித்தியாகம் ஆகும்.

இம்மூன்றையும், பற்றியிருக்கக்கூடியது **நம் மாயாமனம்** ஆகும்.

மேலேகூறியவைகளை, **உடமை! உரிமை!**

அஹங்கார! (நான்) அதிகார! (என்றால்) அபிமானத்தால்! (என்னுடையது) பற்றிய மனதை, விடுவதே சர்வசங்க பரித்தியாகம் ஆகும்.



ஓர் உண்மை என்னவென்றால்?


இன்ப துன்ப! **சுவை!** மனதின் காரியமாகும்!

**ஆனந்தத்தின்** சுவை **அறிவின்** காரியமாகும்.

நம் மனமே, அறிவாக மாறுமேயல்லாது, அறிவு தனிமையில் இல்லை. அதே மனம் அறிவாக, மாறி விட்டால், பின் அது மனமாக **மாறாது!**


மாற முடியாது! மாற இயலாது!

இன்ப துன்பங்களையே, **ஜகவாஸனை!** பழக்க வழக்கத்தினால்! பற்றிய இந்த மனமானது! ஆனந்தத்தின் **சுவையை!** **முன்பின்!** அறியாத தன்மையினால், ஜகத்தை (உறவு, சுற்றம், நட்பு! மற்றும் பொருள்களை) விட்டால், என்ன ஆவோமோ என, பயமுறுத்தும். பயமுறுத்தும் என்பதை விட, பயந்தே சாகும்.




இந்த பய நிவாரணமாகவும்! **வினையின்** **அழிவு!** காரணமாகவும்! சர்வார்ப்பணம் அவஸ்யம், தேவைப்படுகிறது. எப்படி என்றால்?
நான்! என்னுடை! எனது! என்ற நிலையில், நமக்கு நாமே பவமான, **விலங்கை!** போட்டுக் கொள்கிறோம்.
எல்லாம் நீயே! உன்னுடை! உனதே! என்ற நிலையில், எண்ணத்தால் போட்ட விலங்கை! எண்ணத்தாலேயே,
**உடைக்கிறோம்!**

இதில் மற்றோர் உண்மையையும் உணரலாம். சர்வார்ப்பணம் பண்ணும் நிலையில், நம் ஸ்ரீ பகவானும் நமக்கு, அயலாக இல்லவே இல்லை. அவனும் நம்முள், நாமாகவே இருக்கிறான்! என்பதே ஸத்தியம்.
நாமே, ஸ்ரீ பகவானாக இருக்கும் போது, இந்த சர்வார்ப்பணம்! யாருக்கு என்றும்? எதற்கு என்றும்?
கேள்வி எழலாம். இதை கவனிக்கவும்.






மன எண்ணத்தாலேயே! பட்டுப் பூச்சி போன்று, நமக்கு நாமே, தனியிட்டுக் கொண்டோமே? அங்கு, நாம் போட்ட திரையை, நாம் தான் தகர்க்க வேண்டும். நமக்கு நாமே, நம் கவலையைத்தான் போட்ட விலங்கை, நம் கவலைத்திரை பாஸ்! நான் உடைக்க முடியும்! உடைக்க வேண்டும். ஓர் நிலையில், உணர்ந்தால், அனைத்தும் மண்ணே! இந்த மண்ணே, நம் மனதை இருட்டடியாற்றி, அதாவது, கற்பனையினால், ஆசையும் & தேவையும்! தேவையும் & ஆசையும்! மாறிமாறி உண்டாக்கிக் கொண்டு, உடைமையாயும்! உரிமையாயும்! மனைவி பற்றிக் கொண்டு உறவையும்! சுற்றத்தையும்! வாக்கால் இழுத்துக்கொண்டு இவை என்ன விடமாட்டேன் என்கிறதே! என சொல்வது, எத்தனை மடத்தனம் என விளங்கவில்லையா?



அந்த சர்வார்ப்பணத்தின் பயன் என்னவென்றால்?
ஸ்ரீபகவான் என்பவன், எந்த நாம ரூபமும் இல்லாதவன்.
கருணை என்றால் ஸ்ரீபகவான்! ஸ்ரீபகவான்
என்றால், கருணையே வடிவான பொறுமையின்
சொரூபமானவன். நீ கொடுக்கும் நாமரூபத்தை
ஏக குண சொரூபி!
அறிபவன். இவனை
என்றும் சொல்லுவோம். இவன் அம்சம் என்றே!
இவன் செயல் என்றே! மாயாவை!
சொல்லுவோம். இம்மாயாவின் தோற்றமே, இந்த
நாமரூப பிரபஞ்சம். இந்த நாமரூப பிரபஞ்ச
சத்தின் இயக்கமே, மாயாவின் மனம் ஆகும்.
ஆனால் நாமோ, மனதால் ஆட்டிப்படைக்க
கொண்டிருக்கிறோம். இந்த மனம், ஒழிந்தால்
அன்றி, நமக்கு விடிவுகாலம் ஆனந்தம்
இல்லவேயில்லை, யென்பதே ஸத்தியம்.



இங்கு நாம், அந்த ஸ்ரீ பகவானின், குழந்தை என்பதும்! ஸ்ரீ பகவானின், அம்சம் என்பதும்! ஸத்தியமே. இங்கு எல்லாம் நீயே, எல்லாம் உன்னால், எல்லாம் உனதே, என சர்வார்ப்பணமாக, விட்டு விட்டால்? ஸ்ரீ பகவானின் மாயா, உன் தாவ காரியங்களை அவசியம் பார்த்துக் கொள்ளும்.

இது இந்த **ஏழையின்** அனுபவமாகும்.

சர்வார்ப்பணத்தால்:- தாவசிரமங்கள் குறையும்.

” ஏற்று வந்த வினை முடியும்.


” வேறு சொந்த, பந்த, பாச, வினை தொடராது.

” குணதோஷங்கள் படிப்படியாக அழியும்.

” ஸத்வ குணம் ஒன்றே நிலைபெறும்.

பிரம்மார்ப்பணத்தை, ஏற்க. தகுதி உடைய, **அறிவாக**! உன் மனம் மாறிவிடும்.


(8)



(உ) பிரம்மார்ப்பணம் :- இதை நன்கு உணரவும்.

நாமரூபங்களைப் பற்றிப் பற்றி, ஜன்மங்கள் வீணாய் போனதா?
" " கருக்குழி சென்ற காலங்கள் " ?
" " காம மோகத்தில் அலைந்த தேவீவாம் " ?
" " பொன், பொருள், தேடி அலைந்தது " ?
" " குணதோஷங்கள் பற்றிய காலங்கள் " ?
" " தெரு நாய் போல் அலைந்த " " ?
" " உறவு சுற்றத்தில் கொண்டாடிய " " ?
" " போட்டி, பொறாமையால், அலைந்த " " ?
" " பணம், பட்டம், பதவி, என " " " ?
" " உறவு சுற்றம், உனக்காக அழுத " " ?
" " பின்னே பேரன் பேத்திகளை, கொண்டாடிய " " ?
" "

உன்னுடைய தால வினைக்கூட்டை, அதாவது புண்ணிய பாபபிண்டத்தை, அதாவது நாறிப் போகும் சடலத்தை, **நான்! நான்!** என கொண்டாடி ஆட்டம் போடுகிறாய், ஸ்ரீபகவான் பொருளை **எனது! எனது!** என உடைமையும், உரிமையும், கொண்டாடி, நீ எவைகளை




உடைமையும்! உரிமையும்! கொண்டாடினையோ,
அவைகளாலேயே, வினைகளை தேடி, கருக்குழியும் செல்கி
றாயே? இது உனக்கு, அவமாக தோற்றவில்லையா?

இதை கவனி?

அறிவே! ஆத்மா! ஆகும். அந்த ஆத்மா
வாகிய, அறிவு மாயாவை, பற்றினால் ஸ்ரீபகவான்! ஆகும்
அதே ஆத்மாவான, அறிவானது மனத்திரை
யால்! மூடுண்டால், சாமானிய ஜீவன் ஆகும்.
இதுவே நியதி.


ஓர் சின்ன உரையாடல்!

அறிவு தந்தையாகிய ஸ்ரீபகவான்.
மாயா நாமரூப சிருஷ்டியின் ஸ்ரீ மாதா.
மனம் அந்த மாயா தாயின் விளையாட்டின்
நிமித்தமாக, அந்த ஓர் குழந்தை.
இம்மூன்றையும் வைத்து, ஓர் உரையாடல்.



அறிவாகிய தந்தையே, தாயாகிய மாதாவுக்கு,
**ஆதாரம், ஆதரவு** ஆகும்.
தந்தை, இருப்பு மட்டுமே உடையவர். ஆனால்
இயக்கம் அற்றவர். ஆனால் இயக்கம் உடையவர்
தாய், இருப்பு அற்றவர். ஆனால்
அதைப் போலவே, அவள் மகனான, **மனதிற்கும்,**
இருப்பு இல்லை. இயக்கம் மட்டுமே உண்டு.
தாயின் இயக்கம், நாம ரூபங்களான, **இயற்கை**
**யாக,** உண்மெய்யுதவி ஆகும்.
அவள் மகனின் (மனதின்) இயக்கம், அந்த இயற்கையை,
**செயற்கை** ஆக்கி; தேவை & ஆசை, என்ற
நிலையில், பிரிவினையைச் செய்து, உடைமையும் உரிமையும்
கொண்டாடி, இன்ப துன்பமாக, சேவைக்கும்,
**தொழில்,** என்றே உடையவன்.

11



மகனாகிய மனம் சொல்கிறான்:- இது வேண்டும்! அது வேண்டும்! இது எனது! அது எனது! இது சுவைக்கிறது! அது சுவைக்கிறது என, வாலிப வயதில் தொட்டமடித்து சுற்றுகிறான். குழந்தையாயும்! வயோதிகத்திலும்! மனைவிருக்கி இல்லை!

அறிவாகிய தந்தை சொல்கிறார்: போதுமடா மகனே! போதும்! ஓர் அளவோடு நிறுத்து! என்று அறிவுரையை மௌனசாட்சியாய் இருந்து சொல்லிக் கொண்டே இருக்கிறார்.

ஆனால் மாயா! ஆகிய தாயோ! மகனே! மகனே! உனக்காக, அழகழகாக! செய்து தருகிறேன். புதிப்புதுச்! சட்டையும் தருகிறேன். இப்போது விளையாடாமல், நீ எப்போது விளையாட முடியும்? என மோஹபோதையை உண்டாக்கிக் கொண்டே இருக்கிறாள். மாயா.



(12)

அந்த தாயாகிய மாயாவின் எண்ணம்: இக்குழந்தை **என் அப்பன்** யாருமே பொருள் எனச் சொல் இருளே. இவன் இங்கு விளையாடத் தகுதி அற்றவன் எனை மோஹ போஹம் பொருள் உனக்கு கொடுப்பதை குறைத்துக் கொள்வான் காரணம்? தொடரும்.

அந்த மகளாகிய (மனமாகிய) குழந்தை! தன் தந்தையாகிய, மனச்சாட்சியின்! அறிவுரையை, கேட்டு நம்பினால்; **அறிவு** (ஸ்ரீபகவான்) ஆகவாம். தாயின் (மாயாவின்) மாயாவில், மயங்கி அவருடைய, **அழகு** இருட்டியில் மயங்கினால்; **புசிக்கும்!** **அறிவு** புரியாது மறைபடும்.

அதில் ஓர் உண்மை, எப்படி மறைந்திருக்கிறது என்றால்? அந்த மனமான குழந்தை! அறிவு சொரூபமானதும் தந்தையிடம் **(ஸ்ரீபகவானிடம்)** **அப்பா!** அந்த அம்மா, புள்ளி விளையாட்டு போதும். எல்லாம் நீயே என்றும், எல்லாம் உன்னால் என்றும், எல்லாம் உனதே என்றும், கண்ணீர் பெருக! மனம் உருக! மூன்று வேளை **நாளும்!** நடுவில், பிரார்த்தனை செய்தால், அந்த தாய் **(மாயா)** ஒதுக்கமாட்டாள்!



அந்த மாயாவுக்கும் (13)
,, மனதிற்கும்
நான்! என்றும்!
எனது! என்பதே
ரொம்ப பிடிக்கும்.
விளையாட்டின் ரஸனை
க்கு அவை பிடித்தமான
வையே. ஆகவே இம்மூன்
றையும் விட்டு விட்டால் மாயா உன்னை நெருங்காது
மனம் நெருங்காது. இது சத்தியம். முடிந்தது.


அந்த தாயாகிய மாயா, என்ன செய்வாள் என்றால்?
அம்மா! பொருள் அப்பா! பொருள் என்று
சொல்கிறேனே? இவனுக்கு, நம் மோஹபோஹப்பொருள்,
கொடுக்க வேண்டாம் என, படிப்படியாக நிறுத்திக்
கொள்வாள். காரணம் உன் அம்மா! மாயா வானவள்,
மிகுந்த ரோஸக்காரி! ஆகும்.
இந்த சர்வார்ப்பணமே! பிரம்மார்ப்பணமாக மாறிவிடும்.
எப்படி என்றால்?

சர்வார்ப்பணம் என்பது :- எல்லாம் நீயே! என்பதாகும்.

பிரம்மார்ப்பணம் என்பது:- எல்லாம் ஒன்றே! என்பதாகும்.

எல்லாம் நீயே என்றால், கொடுப்பவன்! வாங்குபவன்! எனத்வைதம் ஆகும்.
எல்லாம் ஒன்றே! என்றால், அங்கு கொடுப்பவனும்! வாங்குபவனும்! நாமரூபம்! அற்ற நிலையில், ஒன்றாகி விடுகிறார்கள்.





இவ்வு, சர்வார்ப்பணத்தில், நாம் கொடுப்பது!

**நாமரூப/குணா/வின்** சம்பந்தம் ஆகும்.

இவ்வு, பிரம்மார்ப்பணத்தில், அனைத்து நாமரூபங்களும்!

அழிந்த நாசமானநிலையில் **அபேத** நிலையில்

எல்லாம் **மனையே பரமே/** என்றும்;

எல்லாம் **பரமாகிய மனோ/** என்று

பரசொரூப ஸ்திதியில், இருப்பது ஒன்றே! என்றும்;

நடப்பது நலமே; என்றும்; முடிந்த மௌனநிலையை பெற்று விடுகிறது.

ஆனாலும் எல்லாம் நீயே/என்று, கொடுக்கும் நாமரூப பொருள் இருக்கும் வரை! அதை ஏற்கும் ஓர், பகவானும் இருந்தே ஆகவேண்டும். நாமரூபம் எந்தவிதமான சர்வநாசம் அடைகிறதோ! அங்கு ஸ்ரீ பகவான் நாசமானார் என்று சொல்வதைவிட, ஸ்ரீபகவானும் நாமமாகிவிடுவார்; என்பதே சத்தியம்.





பரசிவம் என ஏன் சொல்கிறோர்கள் என்றால் பரமும் ஸ்ரீபகவானும் இணைய வேண்டுமே என்ற கருத்தாலே ஸ்ரீபகவானல் வினை முடிந்து நாசமாகும். காரணம் வினை நாமரூப உலகின் படைப்பு ஆகும். தொடரும்.

நாமரூபம் நாசமானதற்கு, ஸ்வய ஞான அனுபவத்தால்!

தரும் விளக்கமாவது:— ஓர் மூன்று பாடல் மட்டும் தருகிறோம்.

௨. என்னையும் அயல் இன்றி, எல்லாம்! என்றும், ஏகபரப்பிரம்மமதாய்! இருந்த போதும், கன்ம முறும்மனதுடையோர், அந்த பரசிவத்தின்! கருணையை! பெறாத குற்றத்தால்! வேறு, வேறாய், உள்ளத்தில் உணர்ந்து, மஹா பவ துக்கத்தை அடைவதினால், சாதனையாளர்! அவரும், அந்த பரசிவத்தின்! கருணையை, பெற்றே ஆகவேண்டுமென, வலியுறுத்துகிறார்.



அவிவேயோ ஸ்ரீபகவானின் பொருளெனதாக பாவனை பண்ணியதால் வந்ததாகும் - பரந்த அதன் நிழலான மாயாவால் வந்ததே இம்மனம் ஆகும். ஆகவே அம்மனம் அந்த மாயா விடம் அந்தக்கரண நிலையாகும். மயமாகி ஒழுங்கவே மனம் ஞாதா(?) மனதின் பரகதியும்! வினைக்கு ஒதுங்கியும் வேண்டும். முடிந்தது.

(16)

39. பலகாலப் பழக்க (பேச்சு), வழக்கத் (செய்கை), தினால்! த்வைத உணர்ச்சி தானே; ஸ்வபாவம்! பாரமார்த்திகம் தான்! என்ற எண்ணத்தோடு, கூடியிருந்தாலும்; நொலியாத த்வைதம் தான் தோன்றும். அத்வைதம் தோற்றவே, தோற்றுது. ஆகவே அதி சிரத்தையோடு;

அலையாத, அதிஷ்டான, அறிவாய் நின்ற; அத்வைதமான! பர வடிவான! மனனே! என்ற நிலையில், யத் பாவம் தத் பவதி! சற்றேனும்; சலிப்படையாமல்! ஸந்தேகம்! தாங்கம்! கலக்கம்! பயம்! இல்லாமல் சிந்தித்தால், அதுவே நாம் என ஆவாய்.






98.


சர்வமும்! பிரம்மமெனப் போதித்தாலும்.
இடையறாது! வேதாந்தம் படித்தாலும்.
ஸ்ரீபகவான் கருணையில்லா!
வெறும் மூடர்க்கு! (முன்பாடலில் சொன்னபடி)
மபகாய, பழக்கவழக்க,
(பேச்சு) (செய்கை)
தோஷ குணங்களால்! மீண்டும் மீண்டும்!!
இருமையென! இதயத்தில் தெரிவதன்றி,
எல்லாம், பிரம்மமயம்! என உரைமுடிவதில்லை.

ஆகவே எம் அன்பான ஆத்மானந்த குழந்தாய்!
முதலில் சர்வார்ப்பணத்தால்! ஸ்ரீபகவான் கருணையைப் பெறு.
பின் பிரம்மார்ப்பணத்தால்! ஸ்ரீ ஸத்குருவின் உபதேசம்
ஸ்வய அனுபவத்தை கொடுக்கும்.



பல கோடி, ஜன்ம சுகிர்தம் என்ற, பவனி கருகாத,
**தர்மமானது!** முன் ஜன்மாவில் கிடைத்து
ஸ்வய அனுபவம் பெற்றிருந்தால், இந்த சர்வார்ப்பணம்!
**செய்ய முடியாது! செய்ய**
**இயலாது!** அங்கு, உன் மனம், தங்கு
தடையின்றி, இயல்பாகவும்! கம்பீரமாகவும்!!
பிரம்மார்ப்பணத்தை! ஒன்று அனுபவிக்கும்.
அல்லது!
சர்வார்ப்பணம்! செய்ய, தடையற்ற **ஆனந்தம்**

பிரம்மார்ப்பணத்தை! ஒத்த சந்தேக காங்க கவக்க பயம்!
ஒருபருமாயின், முதலில் சர்வார்ப்பணம்! செய்வாயாக.
சர்வார்ப்பணம்! தேவையில்லையே! ஆத்மாவே நாமாக இருக்க,
ஸ்ரீபகவானும் நாமாக இருக்க, எல்லாமே, நாமாக இருக்க,
சர்வார்ப்பணம்! வெறும் பொழுது போக்கே! என்ற
**உணர்வு!** இருக்குமாயின், சர்வார்ப்பணம் வேண்டாம்
பிரம்மார்ப்பணம்! **ஒன்றே** போதும் என நிறைவுறுவோர்.
(இது ஸ்வய சோதனையாகும்)



பிரம்மார்ப்பணம், தங்கு தடையின்றி, இயல்பாகவே இருக்கும் நிலையில், உன் **அறிவு** இருந்தால், மனம் மறைந்தான நிலையில், **நீ** இருந்தால், நீயே உன்ன பாட்டை நிறைவேற்றுக்கொள்.

**ஓ அசைகின்றது**, அதாவது, சலிக்கின்றது, அதாவது, சஞ்சலம் அடைகின்றது, **மனமானது ஓர்மை** படவில்லையானால், அதனால்

அகம்பிரம்மம் என்ற பிரம்மாண்ம பாவனையானது
அகம் பிரம்மம்! ஜெகம் பிரம்மம்! அகமே எல்லாம்!
ஜெகம் பரமும் ஜீவர்களும் சிறிதும் இல்லை என்ற நிலையில்
எல்லாம் ஒன்றே! அதுவே நாம்! நாமே அது! என்ப
"**நீ பெறவில்லையாயின்**"


**சிரத்தை**யின் நம்பிக்கை வைராக்கியத்துடன்.



(20)

பரத்திற்கு
எந்த தர்மாதர்மமும்
இல்லையென்பதே ஸத்தியம்.
ஆனாலும் அப்பரமென்ற
மாடியில் ஏற இந்த
தர்மாதர்மம் என்ற
படி அவஸ்யம் உண்டு.
படி மாடி ஏறுது. ஏறமுடியாத
படிமாடி ஆனால் அப்படிகளே உள்ள மாடி
மௌனமாகும். அதாவது
ஒதுங்கிவிட்ட படிகள்
ஒதுங்கிய படிகள் அழிந்து நாசமாகிவிடும்.

யாம் பிரம்மம்! யாம் பிரம்மம்! யாமே எல்லாம்! அசைவற்ற பரமே நாம்! என்ற, ஒலியாகிய சப்தத்தை! சர்வசதாவும், சொல்லிக் கொண்டே இருந்தாலும், இது லௌகீக தர்மமும் இல்லை! இது தெய்வீக தர்மமும் இல்லை! இந்த பர தர்மத்தால்! குறிப்பு:- பரசொரூபத்திற்கு, எந்த தர்மாதர்மமும் இல்லை என்பது ஸத்தியமே. ஆனாலும் 100 படிகள் கொண்ட மாடியில் ஏறும் போது, 99 படியில் மிதிப்பது போன்று, இந்த தர்மமாகும். படிமாடி ஏறுது! படிமாடி ஒதுங்கி விடும்! அந்த நிலையில், அநுபவத்தே, இந்த பரதர்மமாகும் நிலை கொள்ளாமல், அப்படியும் இந்த மனமானது, மெள்ள மெள்ள! மெள்ள மெள்ள! மெள்ள மெள்ள! மெள்ள மெள்ள! மெள்ள மெள்ள! மெள்ள மெள்ள! பராவஸ்தையில் நிலை பெற்றுவிடும் என்பதே இப்பாடலின் கருத்தாகும்.




இந்த முப்பத்தி இரண்டாவது பாடல் மட்டும்
சர்வார்ப்பணம் வேண்டாம்! என்றும் பிரம்மார்ப்பணம்!
ஒன்றே போதும்! என உறுதியாக சொல்லும்
பாடலாகும் ஆனாலும் 3 கவனம் தேவை!!!
ஆரம்ப, ஸ்வய அனுபவம் பெறுவதற்கு, இந்த
7 வது பாடல்! மிக மிக மிக மிக, முக்கியமானதும்.
இப்பாடலில், மூன்று நான்கு, வரிகள் மட்டும் போதுமானது.
இந்த த்வைத நாமரூப! ஜக.
ஜீவ! சொரூபங்கள் எல்லாம் ? விவகார நிலையில்
ஒருவருக்கொருவர் நேருக்கு நேராக!
(எதிரும் புதிருமாக = நேரே காணுதல் பரணி பேசுதல்)
இருந்து கொண்டு! கண்டும்! கேட்டும்! பேசியும்!
விளங்கப்படுவதாலும்! விளம்பப்படுவதாலும்!
விளம்பரப்படுத்துவதாலும்! இந்த நாம ரூபங்கள்! இருப்பு
ஸத்தியமாக தோன்றுகிறது.



ஸித்தாகிய (22)
சித்தத்தின்,
நாமரூப ஜகஜீவ
செயல்களை ஓர்
விளையாட்டாகக்
கொண்டால் விளையும்
என்னும் வினை இல்லை.
வினையமாக கொண்டால்
அது வினையாக நடைபெறுவதும்
முடிவதும். இவ்வினைக்கும் அதன் இயக்கத்திற்கும்
நம் மனமே காரணம். வேறு எவரும் காரணம் இல்லை.

அப்பாடல்!


இத்துவைத, ஜகத் தெனவையும், விவகாரத்தில்;
யாவர்க்கும், எதிர் எதிராக, தோற்றுவதால்;
(இது) **ஸித்தின்** மறு வடிவம்! **சித்தம்!** என
உணராமல், நாமரூப ஜக ஜீவ, தோற்றம் அனைத்தையும்
**மனம்!** படைத்த மனிதன் மட்டுமே ஸத்தியம்! நித்தியம்!
என நம்புகிறான்.
இதன் உட்கருத்து யாதெனில்?
எல்லாம் **ஸத்தாகிய மனதை!**
இருந்தும், மனதை உணராமல்; அதாவது ஸத்தே
**ஸித்தாகி** இருந்து, விளையாடுகிறது என உணராமல்;
**சித்தமாகி!** பாவனை செய்து; நாணப்படுகிறோம்!
அது பற்றி பேசிப் பேசியே, **வீண்** (வினையை)
கேட்புகிறோம்!
காலம் கடத்தி, **வினையம்** தேடிக் கொள்வது,
எத்தனை மனமடமையானது, என உணர்ந்தால் போதும்.



௨0 பாடலில், குறிப்பாக உணர்வது :-


மனதால் செய்ததுவே, செய்ததாகும் என்றும்,
மற்றொன்றில் தூயத்தால் செய்வது, செய்ததாகாது
என்கிறார். இதன் முக்கிய கருத்து யாதெனில்?
வினை, மனம், விதி, ஆகிய இம்மூன்றும் தான்,

நாமரூப, ஜகத் ஜீவ, பிரவர்த்தி ஆகும்.
வினை/புண்ணியபாபமாவும், மாவை அரைக்கும் கிரைண்டர் ஆகும்.
மனம்/ஸ்விட்ச் போர்டு ஆகும்.
விதி/மின்சாரம் ஆகும்.
இம்மூன்றும், ஒன்று இல்லாமல், ஒன்று இயங்கமுடியாது.
இது ஓர் உவமானமே! ஆனால் உண்மையில் உணர்ந்தால்,
மனதின் எண்ணமே, வினையாக மாற, அந்த வினையே,
விதி நடத்தி வைக்கிறது, என பொருள்படும். இங்கும்
தாவம் ஓர் கருவியே! இந்த மனமே, தாவ
இயக்கத்திற்கு, காரணமாக இருக்கிறது. அக்காரணத்தை,
நடத்திவைக்கக் கூடியது, தோன்றாத மின்சாரம் என்ற,



விதி ஆகும். இந்த மனமானது, ஓர் சாதனையாளனிடம்
சர்வார்ப்பணமாக, செயல்படும் போது, புதிய வினையை
தொடாமலும், தொடராமலும், பழைய வினையை
மட்டும், முடித்து வைக்கிறது. புதிய வினை தொடராத
தன்மையினைப், **வினையின்** அழுக்கம் இல்லாத
தன்மையினால், பிரம்மார்ப்பணம் செய்ய ஏதுவாகிறது.
அதனால் ஜீவன்முக்தி எளிதாகிறது. இந்த மனதிற்காகவே
மற்றோர் பாடல் உண்மை அப்பாடலானது?


**௨௬** வது பாடல்:- **தனதுமன** முயற்சியினால்,
**பிரம்மாண்மபாவனை**, செய்பவருக்கே,
**பர** உணர்வு எளிதாய் கிட்டும் என்றும்.
அப்படி கிட்டியதனால், அந்த **ஆனந்தம்**
சுகம் கொடுக்கும் என்றும், சுபமாக்கும் என்றும்,
அதி அதி அதி அதி அதி, **சுபமாகும்**
என்றும், கூறி, இந்த தனதுமன முயற்சியை, வெகு
திடவுறுதியாக, சொல்கிறோம். இதை கவனிக்கும் போது?





எம் ஞானக் குழந்தைகளே! 12/ 39/ 94/

இவை மூன்றும் பரசொரூப ஸ்திதியையே வசியமாக கூறுகிறது.

இறை கருணையை பெற்று வாழிய, பரசொரூப ஸ்திதியின், அனுபவம் ஸ்வயமாக! அமையாது என்பதே, கருத்தாகும். இவ்வது பாடலில்! கள்ளமூறும் மனதுடையோர், அந்த பரசிவத்தின் (ஸ்ரீபகவானின்) பரிபூரண கிருபை வேண்டும் என்கிறார். கள்ளமூறும் மனதுடையோர் என்று ஏன் குறிப்பிடுகிறார் என்றால்? அங்கு மனம்/ வினையின்/ புசிப்பை/ விடவில்லை என மறைமுகமாக குறிப்பிடுகிறார். வினையின் புசிப்பை நான்/ எனது! என உள்ளத்தின் உள்ளேயே!



புரியும்படியாய், அதை கள்ளமனம்! என்கிறார். இங்கு சர்வார்ப்பணத் திறவுகோல்! கள்ளமனம்! நல்ல மனமாகும் என்பதை, அவசியம் உணர வேண்டும். அதைப் போலவே, 39 வது பாடலில், பல கால பழக்க வழக்கத்தினால், துவைதம் மறையாது! என்றும்; அத்வைதம் தோன்றாது என்றும் பொருள்படும். இங்கும் இந்த பழக்க வழக்கம் என கூறுவதும், வினையின் பாதிப்பே, யாகும் என உணரவும். வினையின் பாதிப்புக்கு காரணம், நான்/எனதை விடாத நிலையாகும். இங்கும் சர்வார்ப்பணத் திறவுகோல்! நான் எனது நாசமாகவேயன்றி, வேறு எதுவும், நான் எனது நாசமாகாது என உணரவும்.



நான் எனதை, சர்வார்ப்பணத்தினால் நாசம் செய்து விட்டால், ஜீவனின் **பசு** நாசமாகும்.

ஜீவனின் பசு நாசமானால், மறு **ஜனனம்**


பிரம்மார்ப்பணமாகிய, எல்லாம் ஒன்றே, அது பரமாகிய மனிதனே, என்றும், மனிதனாகிய பரமே, என்றும் **நாமே அது** என்பதும், எந்த தங்கு தடையின்றி, பயிற்சி முயற்சி இல்லாமல், இயல்பாகவே, நாம் **அதுவாகவே** இருப்போம். இது சத்தியம்.

அதைப் போலவே **98** வது பாடலிலும்:—


பல பல, பல பல, பல பல, (கல்ப கோடி) **காலமாக** வேத வேதாந்த பாடம் போதித்தாலும், படித்தாலும், கேட்டாலும்,

,, ,, ,,

ஸ்ரீபகவான் கருணையை பெற்று, சர்வார்ப்பணத்தினால் **ஜீவனின் பசு** நாசம் ஆகாமல்




ஒருமை தோன்றுது! இருமை தான் தோற்றும்!
இதன் காரணம்? நம் அறியாமையினால்!
நம் அறிவில்லாத தன்மையினால்! அதாவது நம்
கவனக்குறைவினால்! ஸ்ரீபகவானின் மாயா
சிருஷ்டியை! அவனுடைமையாக பாவனை பண்ணாமல்;
என்னுடைமை! என பாவனை செய்வதாலும்; வினை
உடல்! அவன் இயக்கமாக கருதாமல்; நான்! என்றால்!
என்ற அஹங்கார! அதிகார! ஆதிக்கத்தால்! புசித்த
தன்மையாலும்; ஸ்ரீபகவான் வேறு! ஸ்ரீபகவான் பொருள்
வேறு! நாம் வேறு! என்ற பேதஉணர்வின்
பழக்கவழக்க! தோஷத்தால், இந்த மனதிற்கு,
எவ்வாறு! எங்கும்! என்றும்! ஒருமை தோன்றுது! இருமைதான்
தோற்றும். இவை { சர்வார்ப்பணத்தால் மாறும்.
பிரம்மார்ப்பணத்தால் மறையும்.



பாடல் 19. இனி பாடல்கள் தொடரும்
கடைசி அடி நான்கு;


நீங்காமல் எங்கும் ஓர் நிறைவாய் நின்ற;
நிலை அறிவு ஆன பரம் நாம் என்றே;
தூங்காமல் தூங்கும்! நிலை கிட்டும் மட்டும்;
தொடர்பாக சிந்தித்து சாந்தனவாய்.

23 பாடலில்
மனோ ஜயம் திடம் ஆகும் வரை;
„ வியாபாரம் அதனையும் விடு!
அது ஓர் உவமானமே! உண்மையல்ல!
சமுத்திரம் எப்படி ஓர் பெரிய நீர்பரப்போ?
ஊசி நாட்ட, இடம் இல்லாமல், எப்படி அது நீர்
வியாபகமோ? அதைப்போல, பரசொரூபமானதை,
எங்குமாய்! ஏகமாய்! எல்லாமாய்! காலம் கடந்த நிலையில்




அது! அதுவாகவே! இருக்கிறது;
என்பதே பேருண்மை. அதில் தோன்றும்,
உப்பு கட்டிகளோ! பனிக்கட்டிகளோ!
நாமும்! ஜட ஜீவ, தோற்றங்கள் அனைத்துமாய்
எல்லாம், அச்சமுத்திரத்திற்கு, அயலாக இல்லை
இல்லை யென்பதே, ஸத்தியமாகும்.
மலமற்ற (மனமற்ற) அறிவாக!
உணர்ந்தால் தான், இதை உணர முடியுமேயன்றி,
மனக் கண்களால் காண முடியாது என்பதே ஸத்தியம்.
இப்படி மெய்யாகவே, உணர்ந்து விட்டால்,
எண்ணமற்று! ஆசை வற்று! மனம் இயல்பாகவே,
நின்று விடும்! (மனம் மரத்தாகி விடும்)
அதுவே ஹரித்துயில் எனச் சொல்லும், தூங்காத
தூக்கம் என ஞானிகள் சொல்வர்.

31




இந்த நிலை பெறும் வரை:- மனோ வியாபாரம் விடுவாயேல்
மனோ ஜயம் அடைவாயாக! அதாவது?
மனோ வியாபாரம் ஒழிந்தாலன்றி, மனோ ஜயம் இல்லை.
(A) மனோ வியாபாரம் ஒழியும் நிலை:- **நாமரூப**
பொருள், உறவு, சுற்றம், நட்பு, இவைகளில், ஏதேனும்
ஓர் **ஈர்ப்பு** இருந்தால், அதுவே
மனோ வியாபாரம் ஆகும். இதை ஒழிக்க ஒரே வழி,
நாமரூப, ஜக ஜீவ, அனைத்து தோற்றங்களும் பிரகிருதியின்
இயற்கையின் சூழ்ச்சியால், திட்டமிட்ட காரிய
ங்கள், திட்டமிட்டபடி, ஒழுங்காக நடைபெறுகிறது;
என்ற பேருணர்வில் **ஒடுங்கி** நிற்றலே!
மனோ வியாபாரம், ஒழிந்த நிலையால் கிட்டும் **பயன்**
தரக்கூடியதும், சர்வார்ப்பணமே, ஒன்றே ஆகும். அச்
சூழ்ச்சியை, மாற்றவோ! மறுக்கவோ! விலக்கவோ! அழிக்கவோ!
யத்தனிப்பது விபரீதமே! **அழிவும்** ஆகும்.
இதுவே மனோ வியாபாரம் ஒழியும் நிலை.



(B) மனோஜயம் அடையும் நிலை:- மேலே கூறிய நிலையில், மனோவியாபாரம் ஒழிந்தால், மனம் **சலனமற்ற சாந்தி** ஆகும். அப்படி சாந்தியான மனதை! எல்லாம் ஒன்றே! அதுவே நாம்! நாமே அது! என்ற பிரம்மாத்ம பாவனையாகிய! இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்ற ஆத்மா அகமாயிருப்பதுவே! மனோஜயம்! என்ற, மனம் மடங்கிய நிலையாகும். இந்த பிரம்மார்ப்பணத்தில்தான், மனோஜயம் உண்டாகும்.

**25** பாடலில் மனம் **சலனமுடன்** இருந்தால், அம்மனமே நாமரூப, ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகளாக தோன்றும். அம்மனமே **சலனமில்லாது** இருந்தால், அதுவே **பரசொரூப** ஸ்திதியாகும். இங்கு மனோசலனம்! எனக் கூறுவது, நாமரூப கற்பனையால், **லௌகீகமும் & தெய்வீகமும்** இணைந்த நிலை என சொல்லப்படுகிறது.




லௌகீக, நாமரூப, கற்பனையானது, அனைத்து **தோஷ** குணங்களும், இவைகளாலேயே இன்ப துன்பமென்னும், ஜனன மரண பிணியாகும்.

தெய்வீக நிலையில், ஸ்ரீ பகவானின், சௌலப்ய ஆனந்த **காட்சி**யிலும், அவன் **மஹிமை** பிரவாகங்களிலும், இந்த மனம் லயிக்கவில், அதுவும் நிலையில்லாத, **பதமுக்தி**யேயாகும்.

இங்கும், ஜனனமரணபயம், தொலைவதில்லை.

இருப்பது ஒன்றே, நடப்பது நவமே! என்ற ஓர் எண்ணத்தை மட்டும் வைத்துக்கொண்டு, மற்றும் எல்லா எண்ணங்களையும் நாசம் செய்து, அந்த ஒரு எண்ணத்தையும், **அதுவே நாம், நாமே அது!**

எண்ணமற்று சும்மா, சுகமாயிருந்தாலே, பரசொரூப ஸ்திதியாகும். மனம் அசைந்தால், நாமரூப, ஜகத் ஜீவ ஈஸ்வராதிகள் ஆகும். மனம் அசையாதிருந்தால், பரசொரூபம் நாமே ஆவோம்.



பாடல் 29.

கற்க வேண்டிய கல்வியை!

கற்பாயாக. கற்க வேண்டாத பாடம்!

படிப்பு! பட்டம்! பதவி!

பேர்! புகழ்! அந்தஸ்து! இவை பெறும் பணம்!

வேண்டவே வேண்டாம்.

எம் ஸ்ரீவள்ளுவன் வாக்குப்படி :—

கற்றதனால் ஆய பயன் என்கொல் ??????

வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்???
(இறைவன்)

என்றான். முதலில், இறைவனை உணர்ந்து, அறியவைக்கும் கல்வியை, கற்றுக்கொள். அவன் மூலமாக, நீ பெறுவது, அனைத்தும் கல்வி! ஆகும்.

இறைவனை மறந்து! உலகம் அனைத்தும் ஆண் அனுபவிக்கும் கல்வி கல்வியல்ல.

அதுவே வேண்டிய, பாடம்! படிப்பு! பட்டம்! பதவி! பணம்!



ஆடம்பரம் வேண்டுமோ? (35) அமைதி வேண்டுமோ? என்றால் ஆடம்பரத்தை தான் விரும்புகின்றார். கலியுக மாந்தர். ஆடம்பரமான வாழ்க்கையை அமைத்துக் கொண்டு அமைதியை நோக்கி போகும் நிலை எப்படி ஆகும் என்றால் ஓர் முதலையின் மேல் ஏறி ஆற்றைக் கடப்பவன் நிலை எப்படியோ அப்படி முடியும்.


பேர்! புகழ்! அந்தஸ்து! இவை அனைத்தும்! படிப்பு ஆகும்! இது **அழிவை** நோக்கி பருவேகமாக செல்வதாகும்.

உண்மையின் **கல்வி** குற்றம் குறை, நீங்கு வதற்கு கற்பதாகும். குற்றம் குறை நீங்கு வதற்கு கற்பதாகும்.

ஜீவகலாவை தேடு. அவன் கிருபையினால், பணம் கிடைக்கும். அப்பணத்தினால், பசி ஆறுவோம்! இதனால், தோஷ குணங்கள் நாசமாகும். ஜீவகலாவை வேண்டாமல், படிக்கும் **படிப்பு**! பாவங்களையும் தோஷங்களையும் வறுமை பிணி துன்பம் துயரம், இவைகளை **புதிதாக** சேர்க்கும் படிப்பாகும்.

பாடல் **34**

தன்னை அறியும் அறிவாகிய, ஆத்ம ஞானப்பயிற்சி உடையவர் ஆண்பெண்எவராயினும் சண்டாளன் ஆனாலும்! நீசனேனும்! பஞ்சமஹா பாவங்கள்! அறிந்தோ அறியாமலோ, செய்திருந்தாலும், தன்னை அறிந்து! சிவனில் கலந்துவிட்டால், அவன் ஜீவன் முக்தனே என்கிறார்.




பஞ்சமாபாதகம் செய்தவன் வாயிலிருந்து (36)
அவன் நாவில் நாம நாமா நிகழ்வு பெறவில்லை.
பின் அவன் ரக்கமும் குருவின் கருணையும் இணைந்தது. அவனிடம் நாம நாமா பிரகாசித்து
பக்திக்கே அந்த நிலை என்றால் கேட்பவர் ஞானத்திற்கு
ஒழுக்கம்/ துடிப்பு/ உருக்கம்!
வேண்டும்! உன் முயற்சி குருவின் பணி கண்ணை
நிறைவான பாவமே பெறும். மழை பொழிந்திடும்

இந்த பாடல், சகல **பேதங்களையும்!**
நாசம் செய்வதாகும். முன் சொன்னவை நினைவே,
மீண்டும் சொல்கிறேன். ஆனால் கவனம் தேவை!

நீ கொன்றன அனைத்தும்/அனைத்தும் உன்னை கொல்கின்றன.
நீ தின்றன " " உன்னைத் தின்கின்றன.
நீ ஓம்பின (பாது காத்தன) " " உன்னை ஓம்பின (பாது காக்கின்றன)
இதுவே, இப்பிரபஞ்சத்தின், ஸத்திய நிகழ்ச்சிகளாகும்.
அதாவது, இவ்வுலகமாகிய, **நாடக** மேடையில்,
ஒன்றுக்கொன்று, வரவும் பற்றும்/பற்றும் வரவும்!!
ஒழுங்காக **நியாயம்நீதி** தீர்க்கப்படுகிறது.
இதைப் படிக்கும் போது, நியாயம்/ தர்மம்/ ஒழுக்கம்!
ஓர் **கட்டுப்பாடு**/ கட்டுவிடல் போல்
தோற்றுகிறதே என, ஓர் **பய** உணர்ச்சி தோன்றலாம்.








இதை கவனமாக உணரவும்.

**ஒரு குரு** நம்பிக்கை வேண்டும்.

1) நான்! என்னுடைய! எனது! **முழுமையாக** கெட்டு நாசமாகி இருக்க வேண்டும்.


2) எல்லாம் நீயே! எல்லாம் உன்னுடையவ்! எல்லாம் உனதே! ஆகிய இம் மூன்றும், சந்தேக! தயக்க! பயமின்றி! **திட உணர்வு** பெற்றிருக்க வேண்டும்.

மேலே கூறிய, இம் மூன்றும், எந்த சாதகனிடம், பரிபூரணமாக, அமைந்திருக்கிறதோ! அவன் **பின்** தாவத்தை! ஸ்ரீபகவானின் **மாயா** ஒழுங்காக, கவனித்துக் கொள்ளும் என, ஸ்ரீரமணன் தன் வாயிலாக அறிகிறோம்.



சாதகனுக்கு (38)
ஸ்ரீபகவான் நம்பிக்கை
யால் விதி வதி
மாறவில்லை! மறையவில்லை
இதமாக மாறி அமைகிறது.
சாமான்யன் என்றால்!
நான்! எனது! என கர்த்ருத்
வத்தை அவனே அவன்
மனதால் ஏற்றுக் கொள்வதால் அவனே அவன்
விதி விதிக்கு உடந்தையாகிறான் என உணர்க.

இந்த சாதகனுக்குத்தான், இவ்வுலகம் ஓர்
பயிற்சியின் விளையாட்டு கூடமாக,
அமைந்து விடுகிறது.
ஏனையோருக்கு, புண்ணியபாப! இன்பதுன்ப!
நுகர்ச்சியின் வாழ்க்கை கூடமாக,
அமைந்து விடுகிறது.
சர்வார்ப்பணம் செய்பவனின், விதி
ஸ்ரீபகவானின், மாயா வசம் சென்று விடுகிறது.
சாமான்யனுக்கு, அவனுடைய விதி விதிதேவன்
என்ற, காலதேவனின், கணிப்பில் இருக்கிறது.
சர்வார்ப்பணம் செய்தவனின், ஒவ்வொரு செய்
கையையும், அசைவையும் ஸ்ரீபகவானின்
மாயா! அதி அக்கறையுடன், கவனித்துக் கொள்ளும்.
இங்கு ஓர் கேள்வி எழலாம்?




ஸ்ரீபகவானிடமும்! அவன் மாயாவிடமும்!
ஓர் **பாரபக்ஷம்** சாமான்யன்!
என்றும்; சாதனையாளன்! என்றும்; தோற்றுகிறதே,
என, கேட்கத் தோணும்?
சாதனையாளன்! எல்லாம் நீயே! என்று, ஸ்ரீபகவானிடம்
தம் **மனதை** கொடுத்துவிட்டான் என உணர்.
சாமான்யன்! அந்த ஸ்ரீபகவத் உணர்வு இல்லாமல்,
நான்! என்னுடைய! எனது! என தன் **மனதை**
தான்! ஏற்றுக் கொள்கிறான்; என்று சொல்வதை விட
**மனதின் பிடியில்!** அவன் சிக்கியிருக்கிறான்
ஆகவே, இவன் மனதின் செயலுக்கு, **இவனே**
காரணமும் பொறுப்பும் ஆகிறான்; என்று ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.



இப்படி சர்வார்ப்பணம் செய்யும் சாதனையாளனுக்கு, ஸ்ரீபகவானின் மாயாவான் கருணையினால், முன்சொன்ன கடும் கொடும் பாப நிகழ்ச்சிகள், முன் வினையின் காரணமாக, நிகழ்வதாக இருந்தால், தணக்கு தீர்ந்து முடிந்துவிடும். மேலும், தொடராமல் மாயா, பார்த்துக் கொள்ளும்.


வினையின்படி பின் நிகழ்வதாக இருந்தால், இவனிடம், ஆகாமியம் இல்லாத தன்மையினால், அதை இல்லாமலும், அதாவது, அதை நடைபெறாமலும், தடுக்கவும் மாயாவால் முடியும்; என ஸ்ரீமஹான்கள் சொல்வர். இதனால், உணர்வதாவது, சர்வார்ப்பணத்தால் வினைகள் தளர்த்தவும், நீங்கவும், அழிக்கவும் முடியும். காரணம்:- சர்வார்ப்பணமே!



ஆண் & பெண் (41)
உறவு கொள்
வது இன்ப நுகர்ச்சி
க்காக இல்லவே இல்லை.
திருஷ்டியின்
காரணத்தில் இருந்து
கொண்டு அக் காரியம் நடைபெறுகிறது.
அது உடல் இன்ப நுகர்ச்சி இல்லவே இல்லை.
உங்கள் எண்ணமே அத்துன்ப நிகழ்ச்சியாக மாறி
விடுகிறது என்பதே ஸத்தியம்.

பாடல் 44

கற்பிதமாம் விஷய சுகம் அனுபவிக்க,
கனவிலுமே கருதாது தைரியத்தோடு,
(இடம்)
அற்பவும் இல்லாத அகண்ட பர சுகமே சேர,
அகண்ட பர ஞானபவம்/ அடைய வேண்டும்.
அந்த விஷயானந்தமும்/ விதியின்படி தான்
நிகழ்கிறது. நிகழ வேண்டும். இங்கு ஓர்
மனக்கட்டுப்பாடு/ வேண்டும்.
அது சமயம் பார்வையிலும்/ பேசும்
வார்த்தையிலும்/ காம
எழுச்சியின் அங்காவங்களில்,
ஞாண் ஞாங்களை/ குறைத்து குறைத்து நிறுத்தப் பழக
வேண்டும். இங்கு நான்/ என்னுடைய/ என்ற
ஆகாமியவினை/ சேராமல் வைகு கவனமாக இருக்க
வேண்டும்.



ஓர் உண்மை. (42)

அது **காம**

காரியம் அல்ல.

அது **திருஷ்டி**யின்

காரியமாகும். திருஷ்டி

யின் காரியம் ஸ்ரீ பகவானுடையது


அங்கு உன் எண்ணமே காமமிக்க அக்கினி விசிறுது.
அங்கு உன் எண்ணங்களை ஞான பக்த சக்தி விடலாமே?
முயற்சி உன்னுடையது பலன் எம்முடையது.

அங்கு வினையின் காரியம் முடிவடைகிறது! என்றும், இது ஸ்ரீ பகவானின்! ஓர் மாயா விளையாட்டு! என்றும், உணர்ந்து அதே நேரம், ↑ **ஹரே ராம்!** என்ற, ஸ்மரணை யோடு, அந்த விளையாட்டை, போதுமையா! போதும்↑ என்ற நிறைவுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். இங்கு உன்னுடைய சர்வார்ப்பணம்! ஒன்றே, சிறந்த ஔஷதம் ஆகும்.

எல்லாம் நன்மைக்கே! என்ற உணர்வு, உண்மையாகவே இருந்தால், அங்கு கலக்கபயம் வராது. அங்கு நீ ஓர் கருவியே! அவனே கர்த்தா. அவன் பார்த்துப்பன். இங்கு அகண்டபர ஞானபலம் அடைய வேண்டும்! என்றால்?

(A) விபரம் அறியாத, குழந்தைகள் விளையாட்டாக தவறிவிட்டோமா என்று கருதி ஆனந்தம் அடையவாம். தவறவிட்டாம்.


(B) பொம்மை விளையாட்டாக கருதி, **மண்** பொம்மைகள் ஆடிக்களிக்கின்றன என்றும், அங்கு **வினை**கள் ஆடுகின்றன என்றும், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே என்ற உணர்வே, ஞானபலம் ஆகும்.





பாடல் 47.


மனதிலுள்ள விகல்பம் எல்லாம் முன்பு தீர்ந்து,
அம்மனமானது விறகு தீர்ந்த நெருப்பு போல்
உன் யதாஸ்தானமாகிய, அதிஷ்டானத்தில்,
ஆத்மாவில் தான்தானே சாந்தி ஆகிவிடும்.
இப்பாடலில், முக்கிய கருத்து யாது எனில்?
ஸங்கல்ப, விகல்பமே உலகம் ஆகும்.
ஸங்கல்ப & விகல்ப (அழிவே) ரஹிதமே மோக்ஷம் ஆகும்.
என்பதே வேத வேதாந்த, கருத்தும், ஞானிகளின், ஸ்வய அனுபவமும் ஆகும்.
இந்த வாக்கியத்திற்கும், இப்பாடலுக்கும், என்ன தொடர்பு உண்டு என்றால்?
மாயாவின் காட்சி, உலகம் என்றும்,
அக்காட்சியில், மயங்கி விழுவது, மனம் ஆகும்
அக்காட்சியும், அதன் நிகழ்ச்சியும்!






குற்றம் குறை / யாகத்தான் இருக்கவேணுமென்று, நியதியும் / விதியும் ஆகும்.
இதை வைத்து, என்ன உணர்த்தப் படுகிறது என்றால்?
விறகைப் பற்றிய, நெருப்பானது, அவ்விறகு
தீர்ந்தவுடன் / எப்படி சாந்தியாய் அடங்கி,
குளிர்ந்து, மறைந்து விடுகிறதோ, அந்நிலையில்?
இங்கு கூறுவது, குற்றம் குறை / விறகு ஆகும்!

அதை பற்றி எரியும் பற்றி பிடித்து விளையாடும்
நெருப்பு / மனம் ஆகும். ஆகவே இந்த நாமரூப
உலகமானது, விருப்பு வெறுப்பாய் / தோற்றுவதால்,
பேதமும், அபேதத்தால், குற்றம் குறையுமாக,
தோற்றியே, ஆகவேண்டும் / அதுவேயன்றி இல்லையானால்
மனதுக்கு இங்கு வேலையில்லாமல் போய்விடும்.




ஆகவே, விருப்பும் & வெறுப்பும், அதன் பேதமும், அதைப்பிரியும், குற்றம் குறையும், தவிர்ந்தால், **நாமரூப** ஜகஜீவ, தோற்றங்கள் இயல்பாகவே மறைந்து விடும். மறைந்து விடும் என்றால், மாயாஜாலம் போல் மறைந்து விடாது. வடிக்கப்பட்ட **பொம்மை** வாட்டமாக தெரியும். பின் உன் அனுபவத்தினால், எல்லாம் மண்ணைக் காண முடியாது **உணர** முடியும். அதுவே நாம் எனவும் உணர முடியும்.

பாடல் **48** விளக்கத்திற்கு, புண்ணிய பாபம் உண்டு. தெய்வீகத்திற்கு **சத்தியம் வாக்கு** உண்டு! **தர்மச்செய்கையும்** உண்டு! பரமார்த்திகத்திற்கு, **எதுவும்** இல்லை. பரமார்த்திக உணர்வு பெற்றால், பட்டமரம் போலும், குத்துக் கல்லும் போலும். அதை பற்றி ஆனந்தமாய் இருக்க வேண்டியதே.



இது எம் ஸ்ரீரமண பகவானின்
வாக்கும் ஸ்வய அனுபவமும் ஆகும்.
மன அசைவில் / சிக்கி இருப்பவர்களுக்கு
இதை, உணர முடியாது. மனம் அறிவான
நிலையில் அனுபவம் பெற்றவர்தான் இதை உணர முடியும்.
இதன் சுருக்கம்.
இதில் கூறிய, லௌகீகத்தையும் / தெய்வீகத்தையும்
ஆரம்ப நிலையிலேயே, விட்டு விட்டு /
பரமார்த்திகத்தை, பற்றுவது நாஸ்திகம்
ஆகும். அது ஏட்டுச் ஞானம் ஆகும்.
அது வாய் ஞானம் ஆகும். அனுபவ ஞானம் ஆகாது
அதனால் ஜீவன் முக்தி / பெற முடியாது என்பதே,
முக்காலமும், எக்காலமும், ஸ்வய அனுபவம் பெற்ற,
ஸ்ரீமஹான்களின் வாக்கு ஆகும்.



அனுபவ ஞானம் என்பது!

லௌகீக தர்மம், மனம் சம்பந்தப்பட்டதாகும்.

தெய்வீக தர்மம், அறிவு ,,


இவ்விரண்டுமே, கர்மா ,,

முந்தையது இரும்பு வாசி! பிந்தையது பொன் வாசி!

இவ்விரண்டும், கர்மா வினைப்பிணைப்பே யாகும். எந்த கர்மாவிலும், ஆத்ம ஞானம் அடைய முடியாது!

இவ்விரு கர்மாவையும், முறையோடு செய்து! முறையோடு விட்டுவிட வேண்டும். அந்த லௌகீக கர்மாவும்! தெய்வீக கர்மாவும்! கர்த்தத்துவத்தால் விளைவதாகும்.

முந்தையது, சர்வார்ப்பணத்தால்! முடிவுற்று நிறைவு பெறும்! பிந்தையது, பிரம்மார்ப்பணத்தால்! முடிவுற்று! நிறைவு பெறும். மேலே கூறிய இவ்விரண்டும், முறையோடு, செய்து முடித்தால்,



(48)

முன் பாடலில், கூறியபடி, பிறகு தீர்ந்தவுடன்,

அக்கினி எப்படி, நிறைவு பெறுகிறதோ! அந்நிலையில்

கர்மா முழுவதும், தன்மையிறல், நீ அதுவாகவே இருப்பாய்.

பாடல் 55.

இல்லை எனச் சொல்லும், எப்பொருளுமின்றி;


உண்டு ,, ,, ,, ,, ;

வரியாலும்! வாக்காலும்! விளங்கப்படும்! விளம்பப்படும்! எந்த நாமரூப! பொருளுமின்றி,

சொல் அற, சும்மா சுகமாகவே, தாம் தாமாக! இருக்கும் நிலையில், மௌன மௌனந்தமாய்! மனச்சஞ்சலம் இல்லாமல், கருங் கல்லு போல், பர ஞானத்தால்! கற்பனை அணுவளவில் வாத, ஜீவன் முக்தி பெறுவாயாக!

இதுவே அப்பாடலாகும்.

49



இப்பாடலின் கருத்து, உட்பொதிந்த நிலையிலுள்ளது.

அக்காலாதீத பரசொரூபத்தை, "இல்லை" என சொல்லவும் முடியாது. இயலாது.

,, ,, "உண்டு" ,, ,,


,, ,, வாக்காலும்! வரியாலும்! விளக்கவும்! விளம்பவும் முடியாது.

அப்படி விளங்கும்! விளம்பும்! ஒன்று வாக்கினாலும்! வரியினாலும்! **துலங்கப்பட** வேண்டுமானால்?

ஸ்தூலமாகவோ! சூட்சுமமாகவோ! **நாமரூபம்!** பெறவேண்டும். ஆனால், அக்காலாதீத பரசொரூபமோ!

நாம, ரூப, குணம், குறி, கால, தேச, வர்த்தமானம், மன, வாக்கு, காயம், என **10** ஆயும் விளக்கவோ! விளம்பவோ! முடியாததாகும்! இயலாததாகும்.

பின் அது, எவ்வாறு ஸ்ரீ மஹான்களால்! விளம்பவும்! விளங்கவும்! படுகிறது என்றால்?



சொல்லுக்கு அடங்காள்! சொல் **இறந்து தாண்டாளை!** தனக்கு நிகர் எதுவும்,
இல்லாத நிலையில், அகண்டானந்த நிலையில்!

**அகண்டப் பேரொளியாய்**

ஸ்வயமாக உள்ளதென, ஸ்ரீமஹரிஷிகள் வாயிலாக
அறிகிறோம். **அதை உணர!**

**சொல் அற சும்மா சுகமா யிரு!**

இந்நிலை பெற?


**கருங்கல்லு** போல் அசைவற்றிருப்பாயாக!
குற்றங் குறை கற்பனை அற்ற இடமே, அவ்விடமாகும்.

பாடல் **57.** தூலபூத தொகுதிகளான, சரீரங்களே!
நாம் என்றால் அது த்வைத விருத்தி!

ஸத்வகுண சம்பன்னனாய், ஸ்ரீ பகவான் நிலையைப், பெற்றிருந்தால், அது சாட்சி விருத்தி!
எல்லாம் நாமே என்ற அகண்டாண்ட பாவத்தை பெற்றால் அது, அகண்ட விருத்தி!

# சர்வார்ப்பணமும் பிரம்மார்ப்பணமும் என்ன செய்யும்? |






இம் மூன்று விருத்திகளில், தூல விருத்தியையும் தன்று சாட்சி விருத்தியையும் தன்று அகண்ட விருத்தியில் நிலைத்து நில் என்கிறார். இந்த அகண்டான்ம பாவனையில், இருந்து கொண்டுதான், அகண்ட ஜெகதாகாரம் பருகவாம்; அது நாம் என ஆகவாம்.

இப்பாடலின் முக்கிய நோக்கம் என்னவென்றால்?

(A) தூல விருத்தியில் முக்குணமும் / மனமும் இணைந்து, பிணைந்திருப்பதால், இதனால் புண்ணிய பாபமும், ஜனன மரணமும், இணைகிறது.

(B) சாட்சி விருத்தியில், மனம் சாந்தி ஆன நிலையில், ஸத்வ குணம் ஒன்றே இருக்கிறது. இதுவும் பதமுக்திக்குத்தான், வழிவகுத்து கொடுக்கும். இது பரமுக்தி என்ற, ஜீவன்முக்தி நிலையாகாது. (இது அறிவு நிலையாகும். மனமே அறிவான நிலையாகும்)



# (C) அகண்ட விருத்தியில் மனம்

மஹத்தான நிலையாதலால், இங்கு மனம் இல்லை.

இதுகுணாதீத நிலையாதலால், முக்குணமும் இல்லை.

இங்கு அறிவும் பேரறிவாக மாறி விடுவதால்.

எந்த இருப்பும், எந்த பிடிமானமும், இல்லாத் தன்மையால்,

இதன் அமைதியில், அகண்டாகாரமாக இருப்பதால்,


அதுவே நாம், நாமே அது, என்ற பரப்பிரம்மம் நாமே,
ஆகையும் இதுவே ஜீவன் முக்தியாகும் என, அநுபவ
ஸ்ரீமஹான்கள், வாயிலாக அறிகிறோம்.

ஆகவே?

(A) தூலவிருத்தி:- மனகுண, தோஷ, புண்ணியபாப, ஜனனமரணம் ஆகும்.

(B) சாட்சி விருத்தி:- ஏககுண சம்பந்தத்தால், பதமுக்தி ஆகும்.

(C) அகண்ட விருத்தி:- நிர்க்குண விசேஷத்தால், பரமுக்தி என்னும், ஜீவன் முக்தியாகும். ஆகவே, முன் இரண்டைத் தள்ளு, பின் ஒன்றை சுட்டி, அநுபவம் பெறுவோம்.



பாடல் 59.

(A) சிரவணத்தால், அனைத்தையும் **பொருந்தி** செய்யும்.


(B) மனனத்தால் ” **வருந்தி** செய்.

(C) நிதித்தியாசத்தால் ” **விரிந்து** செய்.

(A) எல்லாவற்றையும், பொருந்தி செய்யும் போது, **மனகுண** தோஷம் நீங்குவதால், **நாமரூப** காட்சிகள், மாற்றி அமைக்கப்படும். அதனால் அமைதி சாந்தி ஏற்படும்.

(B) வருந்தி செய்யும் போது, மனம் **சாட்சி** பாவனையால் நிறைவதால், நாமரூப இயக்கத்தில், சந்தேகங்கள் படிப்படியாக மறைவதால், ஆனந்தம் தோன்றும்.

(C) எங்குமாய்! எல்லாமாய்! ஏகமாய்! அனைத்தும் அந்த ஒன்றே நிறைந்திருக்கிறது என்ற, ஏக பர பாவனையால் விரிந்து செய்யும் போது, சர்வசாட்சி பாவனையாகிய, **அகண்டான்ம** பாவனையால், பிரம்மானந்தமே ஜீவன் முக்தியும் வசிதமாகும்.





பாடல் ௬௨.

(A) வாக்கை, அதிகமாக, விரிவடைய செய்யாதே!

(B) பலரிடம் பாடம் கேட்காதே!


(C) ஒருவார்த்தைக்கு, பலபல அர்த்தம் பார்க்காதே!

(A) வாக்கு விரிவடைவதால், முதலில் வாக்கு விரயம். அதனால் பெரும் குழப்பமும்! துக்கமும்! உண்டாகும்.

(B) பலரிடம் பாடம் கேட்பதால், இதுவா? அதுவா? என மனம் குழம்புவதால், மன ஓர்மை குலைகில், மனோ மயக்கம்! உண்டாகும்.

(C) ஒருவார்த்தைக்கு, பலபல அர்த்தம் கண்டால், இவ்வை சந்தேக குற்றமும்! அதனால், தடுமாற்றமும் உண்டாகும்.

ஆகவே இம்மூன்றையும், விட்டொழித்து, எல்லாம் ஒன்றே! அதுவே நாம்! நாமே அது! என கிளி போல், அசை வந்திருப்பாயாக.




பாடல் 64.

தானிய மணியை! எடுத்த உடன், அதன்
பதரை! தூர எறிவது போல். வேதம் அனுபவம்
அனுபவம்! பெற்றவுடன், அந்த நூல் ஒன்றை தவிர,
மற்ற! நூல்களை, தூர ஒதுக்கி விடு.

இது ஓர், ஸ்வய அனுபவம், பெறும் மார்க்கமாகும். அந்தத நூல், பல பார்க்கவேண்டும். ஆனால், அங்கு உன் மனம்! உன் வினையை! அனுசரித்து, விதிக்கப்பட்ட! ஓர் நூலை, உன் மனம், அவசியம் ஏற்கும். அப்படி ஏற்கும் நூலே! தானிய மணி ஆகும். ஏனைய நூல்கள் யாவும் பதர் ஆகும். அப்பதர்களை, ஆராய்வதில் பலனும் இல்லை.


அங்கு உன் ஞான மனம் என்ன செய்யுமென்றால்? பலரிடம், கேள்விப்பட்ட நிலையில், இவர் ஓர் சிறந்த வழிகாட்டி! அவர் ஓர் சிறந்த வழிகாட்டி! இதனால் அனேகர் ஞானம் அடைந்தார்கள்! அதனால் அனேகர் ஞானம் அடைந்தார்கள் அந்த நூல் விட்டால் என்ன ஆகுமோ? அந்த நூல் விட்டால் என்ன ஆகுமோ?



எனை இன்னமும், பல நிலைகளில், சந்தேக குழப்பம்!
தருவது உன் ஞான மனம் ஆகும்.
இறை பரகுரு கருணையைப், நமக்கு
உணர்த்துவது, இந்த நாவேயாகும். ஒரே இடத்தில்
தோன்றுவதான், ஐவந்நே தானையாம். பல
இடங்களிலும் தோன்றினவ், தாவம் விபரயமே
அது கடும் சிரமமே!
நாம் பவன் அடைவது இல்லையென, இறை குரு எதை,
உணர்த்திறரோ, அதைமட்டும் ஏற்பது நமை மனம் ஆகும்.

இங்கும் ஓர் சந்தேகம் எழுவாம்? வரா
நாம் தோன்றும், இந்த ஒரு இடமும் ஐயம் தராவிட்டால்?


எந்த சந்தேகம், வேண்டவே வேண்டாம். உன் இறை குரு,
உணர்வுடனும்! மன உறுதியுடனும்! நீ தோன்றும்
இடத்தில், ஜலம் வந்தே ஆக வேண்டும். இதுவே உன்
நம்பிக்கையே/பலம்/பலன் ஆகும். அப்படி இல்லை
மாயன், இறைவனும் இல்லை/ குருவும் இல்லை/ பரமும் இல்லை/
என்பதே லட்சியம்.



பாடல் 69.

மன அசைவில்லாமல், மெய் உணர்வுடன்! நிற்கும்.
நிலையே, ஜீவன் முக்தியாகும்.
இந்த நிலை பெற்றவர், எவரோ அவர் தான், பிறந்த
பிறவியின், பயனை அடைந்தவராவர்.
அவர் துன்பமுறார்! துகள் (வினை) மருவார்! (சாரார்)
அவர் ஏகபர! வடிவாகவே, இருப்பவராவர். அவருக்கு
இனி இங்கு, எந்த வேலையும் இல்லை.
ஜீவன்முக்தி அடைந்தவரே! பிறவியின்
பயனை அடைந்தவராவர். அவருக்கு, இந்த நாமரூப உலகில்,
கொடுக்கல்! வாங்கல்! போக்கு! வரவு! வாய்நஷ்டம்!
எதுவுமே இல்லை. காரணம்? நாமரூபத்துடன்
நாமரூப, ஜகஜீவ, ஈஸ்வராதிகளோ!
இல்லை யென ஆகும் போது? இவர்களும், இந்த நாமரூபத்துடனும்
இல்லை யென, ஆகும் போது? இவர்கள் அனைவரும், அந்த காரணத்தோடு
ஒன்றே யென, ஆகும் போது? நாமும் அந்த ஒன்றே! என ஏகா
மயமாய், ஆகும் போது? எல்லாம் ஒன்றான நிலையில், நமக்கு
அன்னியமாய், எதுவும் இல்லாதிருக்கும் போது? இங்கு வியாபாரம்
ஏன்? வியவகாரமேன்? அசம்பந்த, வேலைதானேது?

58



பாடல் 73 & 77. அசைவற்று! செயவற்று!
எந்த நாம ரூபமும், அற்று இருக்கும் நிலையில், அதுவே
ஸத் ஆகும்! அசைவன்று அசைவை
உண்டு பண்ணும் நிலையில், அதுவே ஸித் ஆகும்.
அசைக்கும் நிலையில், அதுவே சித்தமும்
மனதும்! ஆகும். அந்த அசை வால் இன்ப துன்பம்!
என்றும், அதனால் புண்ணிய பாபம்! என்றும், ஓர் கற்பனையை
உருவாக்குவது மனதின் ஸங்கல்ப விகல்பமாகும்.
அதாவது குற்ற உணர்வின் கற்பனையாகும். இவ்விடத்திய,
ஸத்! ஸித்! சித்தம்! குற்ற உணர்வின் கற்பனையான மனம்!
ஆகிய இந்த நான்குமே, அக்காலத்தில் ஒன்றாகிய, பரமே யாகும்.
எப்படி என்றால், மலை உச்சியில் பெய்யும் மழை! என்றும்! அது
பிரவாகமாக, கீழே இறங்கும் போது, நீரோடை என்றும்! அதுவே
சமதரையில், பாய்ந்தோடும் போது, நீர் நதி! என்றும், அதுவே
தேங்கும் இடத்தில், குளம்! குட்டை! சாக்கடை! என்றும்.



இப்பாடலில் திணை அளவு என்பதும் இறை அளவு என்பதும் ஏன் போட்டார்கள் என்றால்? மறைவிருந்த இல்லையென்றால் அனுபவ மாணவம் நாமரூப ஜகஜீவ தேகங்கள் இல்லையென்பதும் மறைவிருந்தும் இல்லையென்றே இறை சொரூபமும் நிலை பெற முடியாது என்பதை சுட்டிக்காட்டு இறையும் இறைசொரூபம் நிலை பெறுவது அறிவால் என உணர வேண்டும்.


(59)

பவநாமமும்; பேதமும்; பிரிவினையும்; உண்டாவது போல் தாம் தாமே ஆகிக் கொண்டது பராசொரூபம். மேலே சொல்லிய நான்கு வித

**ஜீவபேதமும்!** மஹா **சமுத்திரத்** திரை, எப்படி அன்னியமாயில்லையோ? அதேநிலையில் ஸத்! ஸித்! சித்தம்! மறைமயகுரு கற்பனை! ஆகிய இந்த நான்கும் நாலாகிற **பரா** சொரூபத்திற்கு, அன்னியமாயில்லை; என்பதே ஸத்தியம்:- அதுவே நாம் என்பதும் ஸத்தியமே.

பாடல் **88** அது மிக மிக! மிக மிக! சூக்ஷ்மம் ஆகும். மனதுடைய **விருத்தி** உதிப்பதற்கு முன்னும்; மறைந்த, ,, நசித்திட்ட பின்னும்; **திணை** அளவும்! **இறை** அளவும்! இல்லாத, ஜகஜீவாதி! இயங்குகின்ற **மறை** விருத்தியிரவில் மத்தியத்தில்; அதாவது **இடையில்** வந்து போகும் நிலையில் **கனவு** போல், இருப்புடையதாக தோற்றினாலும், நாம் **அற** சோதித்தால், இல்லவே இல்லை.

இதுவே இப்பாடலின் கருத்து.



ஐந்து வயதுக்கு உட்பட்ட, குழந்தை பருவத்தில்,
**கோர குணமணம்** உண்டாகவில்லை.
எண்பது, தொண்ணூறு வயதிற்குமேல், ஓர் மனிதனிடம்.
**கோரகுணமணம்** இருந்தமனம். இறந்துவிட்டது.
இடையில் ஓர் நாற்பது, ஐம்பது வருடம் வரை, அம்மனம்
பருத்திய பாடு, சொல்லிமுடியாதுதான். ஆனாலும்
இந்த மத்திய காலங்கள், நடந்து முடிந்த சம்பவங்கள்,
அனைத்தும், **கனவின்** காட்சிதானே? அந்த
சம்பவங்களில், ஏதேனும் ஒன்று திரும்பி வருமா?
அல்லது அப்படி, முடிந்த வாழ்க்கையில், இனிஏதேனும்,
புதிதாக திணிக்க முடியுமா? இனிமாற்றிஅமைத்து
அக்கட்டிலை, கொண்டு வர முடியுமா? முடியாதுஎன்பதே
சத்தியம். அப்படியானால், இந்த நாமரூப, ஜகஜீவாத்மாவின்,
**இல்லாத** நிலைக்கு ஏன் **இருப்பு** கொடுக்க வேண்டும்?
ஆகவே நாமரூபஜகம் இல்லையென்றும். அது தோன்றியதாக
சூனியம் பிரம்ம்ஸத்தியம் என்றும்! அதுவேநாம் என்றும், உறுதிபண்ணு.

ரூ பாபா.




Abode of Love

You Are Everything!